# ALABAMA TAMIL SANGAM ( ATS )

## ப ர் மி ங் கா ம்  ப க் க ங் க ள்

**ATS** **Q1-Q2 2026** **NEWSLETTER**



அலபாமாவின் தமிழ் முகம்

# ATS Executive Team 2026-2027

## Executive Committee



Baskar Raj
President



Rajasekaran
Vice President



Kumaran
Secretary



Vinitha
Treasurer



Dr. Soumya
Public Relations

## Board of Directors & Advisors



Dr. Manivannan
Board of Director



Charles
Advisor

# ATS President Address



Dear ATS Family,

Vanakkam!

It is with immense gratitude and great enthusiasm that I greet you through the first newsletter of our new Executive Committee. Thank you for the trust and confidence you have placed in us. It is truly an honor and a privilege to serve the Alabama Tamil Sangam (ATS) community over the next one and a half years. We accept this responsibility with humility and a commitment to serve every member of our ATS family.

ATS is much more than an organization—it is a home away from home. It is a place where we celebrate our Tamil language, cherish our rich culture and traditions, build lifelong friendships, and create lasting memories for our children. The strength of ATS has always been its people, and together we have the opportunity to build an even stronger, more connected, and more vibrant community.

Our Pongal celebration in January beautifully reflected this spirit. It was heartwarming to see families come together to celebrate our traditions with joy and pride. The thought-provoking Pattimandram led by Dr. Gnanasambandan and the distinguished speakers was a memorable highlight of the event. I extend my heartfelt appreciation to every volunteer whose dedication—from planning and organizing to serving food and the final cleanup—made the celebration a tremendous success. Your selfless service is the heartbeat of ATS.

As you read this newsletter, I encourage you to think of it not simply as a publication, but as our community's voice. Every page reflects the stories, talents, experiences, and aspirations of our members. I warmly invite every family to become a part of future editions. Let our children fill these pages with their drawings, paintings, essays, and creative ideas. Let our youth share their achievements, experiences, and dreams. Let adults contribute stories, poems, travel experiences, recipes, reflections, or open letters that inspire meaningful conversations. Every contribution enriches our community and helps preserve our language, culture, and heritage for future generations.

This newsletter will grow only when it belongs to all of us. I encourage you not only to read and share it with family and friends, but also to become one of its authors. Your voice matters, and your story deserves to be heard.

# ATS President Address

I also wish to express my sincere gratitude to the dedicated members of our Communication, Cultural, Decoration, Food, Sports, and Youth Committees. Your passion, generosity, and countless hours of volunteer service make every ATS event possible. Thank you for your unwavering commitment to our community.

As we look ahead, our vision is simple: to make ATS a place where every family feels welcomed, every volunteer feels valued, every child feels encouraged, every youth finds opportunities to lead, and every member feels proud to belong. Together, let us continue celebrating our heritage, serving one another, nurturing the next generation, and building a stronger Tamil community in Alabama.

Our success will not be measured merely by the number of events we organize, but by the relationships we build, the young minds we inspire, the traditions we preserve, and the lasting impact we leave on our community.

With your continued support, constructive feedback, and active participation, I am confident that our best days are still ahead.

Thank you for being an integral part of the ATS family. I look forward to serving alongside each of you as we write the next chapter of Alabama Tamil Sangam together.

With warm regards,
Baskar Raj Savarimuthu
President, Alabama Tamil Sangam

# தலைவரின் உரை



அன்பிற்கினிய அலபாமா தமிழ்ச் சங்க (ATS) குடும்பத்தினருக்கு,

வணக்கம்!
நமது புதிய நிர்வாகக் குழுவின் முதல் செய்திமடல் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியும் மனமார்ந்த நன்றியும் அடைகிறேன்.
அலபாமா தமிழ்ச் சங்கத்திற்கு அடுத்த ஒன்றரை ஆண்டுகள் சேவை செய்யும் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்த உங்கள் நம்பிக்கைக்கும் அன்பிற்கும் ஆதரவிற்கும் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பொறுப்பை மிகுந்த பணிவுடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் ஏற்றுக்கொண்டு, நமது சமூகத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சிறந்த சேவையை வழங்க உறுதியளிக்கிறோம்.

அலபாமா தமிழ்ச் சங்கம் என்பது ஒரு அமைப்பு மட்டுமல்ல; வெளிநாட்டில் வாழும் நமக்கெல்லாம் அது ஒரு குடும்பம். தமிழ்மொழி, தமிழ் பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றைக் கொண்டாடவும், தலைமுறைகளை இணைக்கவும், புதிய நட்புகளை உருவாக்கவும், நம் பிள்ளைகளுக்கு தமிழ் அடையாளத்தைப் பெருமையுடன் அறிமுகப்படுத்தவும் உதவும் அன்பின் இல்லம். இந்தச் சங்கத்தின் மிகப்பெரிய பலம் அதன் உறுப்பினர்களே. நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டால், இன்னும் வலிமையான, ஒற்றுமை நிறைந்த, உயிரோட்டமிக்க சமூகத்தை உருவாக்க முடியும்.

இந்த ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற பொங்கல் விழா அந்த ஒற்றுமையின் அழகிய எடுத்துக்காட்டாக அமைந்தது. குடும்பங்கள் ஒன்றுகூடி தமிழர் திருநாளைக் கொண்டாடிய விதம் மனதை நெகிழச் செய்தது. முனைவர் ஞானசம்பந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிந்தனையைத் தூண்டும் பட்டிமன்றம் விழாவின் சிறப்பம்சங்களில் ஒன்றாக அமைந்தது. நிகழ்ச்சியின் திட்டமிடல் முதல் உணவு பரிமாறுதல், இறுதியில் அரங்கத்தை சுத்தம் செய்தது வரை தன்னலமின்றி உழைத்த அனைத்து தன்னார்வலர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அர்ப்பணிப்பே ATS-இன் துடிக்கும் இதயம்.

இந்தச் செய்திமடலை ஒரு இதழாக மட்டும் அல்லாமல், நமது சமூகத்தின் குரலாக நீங்கள் பார்க்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதன் ஒவ்வொரு பக்கமும் நமது உறுப்பினர்களின் திறமைகள், அனுபவங்கள், சிந்தனைகள் மற்றும் கனவுகளைப் பிரதிபலிக்கிறது. நமது குழந்தைகள் தங்கள் ஓவியங்கள், கைவினைப் படைப்புகள், சிறுகதைகள் அல்லது கட்டுரைகள் மூலம் தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தட்டும்.நமது இளைஞர்கள் தங்களின் சாதனைகள், அனுபவங்கள் மற்றும் எதிர்காலக்கனவுகளைப் பகிரட்டும். பெரியவர்கள் சிறுகதைகள், கவிதைகள், பயண அனுபவங்கள்,சமையல் குறிப்புகள், கட்டுரைகள் அல்லது சமூகத்திற்கு திறந்த கடிதங்கள் மூலம் தங்களின் எண்ணங்களைப் பகிரலாம். ஒவ்வொரு பங்களிப்பும் நமது மொழியையும் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் அரிய பொக்கிஷமாக அமையும்.

# தலைவரின் உரை

இந்தச் செய்திமடல் உண்மையிலேயே அனைவருக்கும் சொந்தமானதாக மாற வேண்டும். அதை நீங்கள் வாசிப்பதோடு மட்டுமல்லாமல், உங்கள் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் பகிருங்கள். அதைவிட முக்கியமாக, அடுத்த இதழின் படைப்பாளர்களில் ஒருவராக நீங்களும் இணையுங்கள். உங்கள் குரலும் உங்கள் அனுபவங்களும் நமது சமூகத்திற்கு மதிப்புமிக்கவை.

இந்தச் செய்திமடலை உருவாக்க உழைத்த எழுத்தாளர்கள், தொகுப்பாசிரியர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் அனைத்து தன்னார்வலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், தகவல் தொடர்பு, கலை & கலாச்சாரம், அலங்காரம், உணவு, விளையாட்டு மற்றும் இளைஞர் குழுக்களில் அயராது பணியாற்றும் அனைத்து தன்னார்வலர்களுக்கும் எங்களின் நன்றியும் பாராட்டுகளும் உரித்தாகும். உங்கள் நேரம், உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பால்தான் ATS தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

எதிர்காலத்தை நோக்கி நாம் பயணிக்கும் இந்த நேரத்தில், ஒவ்வொரு குடும்பமும் வரவேற்கப்படுகின்ற இடமாகவும், ஒவ்வொரு தன்னார்வலரும் மதிக்கப்படுகின்ற சூழலாகவும், ஒவ்வொரு குழந்தையும் ஊக்கப்படுத்தப்படுகின்ற மேடையாகவும், ஒவ்வொரு இளைஞரும் தலைமைப் பொறுப்பேற்கும் வாய்ப்பைப் பெறுகின்ற அமைப்பாகவும், ஒவ்வொரு உறுப்பினரும் பெருமையுடன் நான் ATS குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லக்கூடிய சமூகமாகவும் ATS-ஐ உருவாக்குவதே நமது நோக்கம்.

நமது வெற்றி நாம் நடத்தும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையால் மட்டுமே அளவிடப்படாது. நாம் உருவாக்கும் உறவுகள், நாம் ஊக்குவிக்கும் இளம் தலைமுறை, நாம் பாதுகாக்கும் தமிழ் மரபு, மற்றும் நமது சமூகத்தில் நாம் ஏற்படுத்தும் நிலையான தாக்கம் ஆகியவையே நமது உண்மையான வெற்றியின் அளவுகோல்கள்.

உங்கள் தொடர்ந்த ஆதரவு, ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் மற்றும் செயல்வீரியமான பங்களிப்புடன், அலபாமா தமிழ்ச் சங்கத்தின் சிறந்த அத்தியாயங்கள் இன்னும் நம்மை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன என்ற முழு நம்பிக்கை எனக்கு உள்ளது.

நமது ATS குடும்பத்தின் ஒரு அங்கமாக இருப்பதற்கும், இந்தப் பயணத்தில் எங்களுடன் இணைந்து நடப்பதற்கும் மீண்டும் ஒருமுறை மனமார்ந்த நன்றி. நாம் அனைவரும் இணைந்து, அலபாமா தமிழ்ச் சங்கத்தின் அடுத்த வெற்றிகரமான அத்தியாயத்தை உருவாக்குவோம்.

அன்புடனும் நன்றியுடனும்,
பாஸ்கர் ராஜ் சவரிமுத்து
தலைவர், அலபாமா தமிழ்ச் சங்கம் (ATS)

## Women's Day

We honored the incredible women of our community with an inspiring talk by Dr. Uma Shashikant, columnist from Economic Times, on personal finance, and fun games, followed by a celebration of women in our community.











## Family Walk

Our Family Walk brought together members of all ages for a refreshing morning of fitness, fun, and bonding with nature and each other.









# Alabama Tamil Academy 2025 - 2026



## Overview

Alabama Tamil Academy has been actively engaged in a variety of enriching and educational activities throughout this academic year, focusing on both language learning and the holistic development of students.

## Summer Storytelling Workshop

We began the year with our Summer Storytelling Workshop, where students were encouraged to listen to a wide range of stories each day. This helped them develop imagination, comprehension, and creativity.

Students were then motivated to create their own stories and present them in creative and expressive ways. Their enthusiasm and participation made this workshop a joyful and memorable experience.

## Kodai Galatta ’25 – A Fun-Filled Community Event

Alabama Tamil Academy, along with Alabama Tamil Sangam, conducted Kodai Galatta ’25, bringing together nearly 150 children for a fun-filled Sunday afternoon. Students participated in exciting games both individually and as teams, promoting teamwork, coordination, and sportsmanship while emphasizing the importance of physical activity.



## Growing Community Impact

These summer initiatives helped Alabama Tamil Academy reach a wider community, resulting in approximately 30 new student registrations this academic year.

## Interactive Learning in Weekly Classes

Learning at Alabama Tamil Academy goes beyond textbooks. Every week, students participate in storytelling sessions where they reflect on stories, share their understanding, and express their thoughts.
This approach enhances both language skills and confidence in communication.

### Visual and Experiential Vocabulary Learning

Students learn Tamil vocabulary through engaging visual and verbal methods using flashcards, pictures, and activities.

Our goal is to make every child, irrespective of grade level, actively involved in learning and understanding the language in meaningful ways.

### Battle of Words – Team-Based Learning

Every three months, students participate in "**Battle of Words**," where they are grouped into teams to collaboratively learn and apply Tamil vocabulary.

Students take on leadership roles, support their peers, and engage in healthy competition. This initiative helps develop teamwork, leadership, and deeper language understanding beyond rote memorization.

### Motivation and Achievements

Winning teams in the "Battle of Words" receive recognition and prizes, encouraging active participation and enthusiasm.
We are proud to witness growing confidence, involvement, and passion for Tamil among all our students.





## Tamil Library for Kids

We have launched a **Tamil Library for Kids** with more than 30 books.

Students are encouraged to read and present stories in their own creative way in Tamil, helping them improve vocabulary, sentence formation, and confidence.

## Annual Day – A Celebration of Language and Culture

This year’s Annual Day was thoughtfully designed to ensure that **every child had the opportunity to participate and shine on stage**.

Students collectively learned and performed a song praising the Tamil language, involving parents as well, creating a strong sense of cultural connection.

Key elements of Tamil heritage such as **Sangam literature**, **Tamil Thai Vazhthu**, **and the states of India** were presented in an engaging Iyal–Isai–Nadagam format, making learning both meaningful and enjoyable.



## Pongal Celebration – Showcasing Tamil Nadu's Richness

Students also participated in a special skit during the Alabama Tamil Sangam Pongal celebration, creatively showcasing the richness and uniqueness of different districts of Tamil Nadu.

This wonderful presentation was beautifully conceptualized and implemented with the guidance of Dr. Jegen, making it both educational and entertaining.

## Teachers – The Pillars of Our Academy

Our teachers and substitute teachers have played a tremendous role in both academic and cultural activities.

They are dedicated volunteers who selflessly invest their time and effort to nurture the children, inspire learning, and actively engage them in various activities. Their commitment and passion are truly the backbone of Alabama Tamil Academy.

## A Message to Parents

When the question arises — "*Why should my child learn Tamil?*" — the answer is simple yet powerful.

***Tamil is not merely a language—it is our identity, our heritage, and our responsibility. It carries the voice of our ancestors, the depth of our culture, and the essence of who we are. When a child learns Tamil, they are not just learning words; they are connecting to their roots, values, and history.***

***Choosing not to learn Tamil is not just missing a language—it is losing a vital part of our identity. Tamil should never be treated as optional or secondary. It is every child's birthright and our duty as parents to ensure it is passed on with pride.***

***Let us not leave this as a choice. Tamil is a legacy—one that must be preserved, nurtured, and proudly carried forward by the next generation.***

We sincerely thank the parents who have taken this important step to bring their children forward to learn Tamil and be part of this journey.

**Member Article** **பாஸ்கர் ராஜ்**

## இணையத்தில் சுட்டது & இதயத்தை தொட்டது

*"எழுதியவர் யார் என்று தெரியவில்லை"
*******************************************

வாழைத் தோட்டத்திற்குள் வந்து முளைத்த... காட்டுமரம் நான்..!
எல்லா மரங்களும் எதாவது... ஒரு கனி கொடுக்க , எதுக்கும் உதவாத... முள்ளு மரம் நான்...!
தாயும் நல்லவள்... தகப்பனும் நல்லவன்... தறிகெட்டு போனதென்னவோ நான்...

படிப்பு வரவில்லை...படித்தாலும் ஏறவில்லை...இங்கிலீஷ் டீச்சரின் இடுப்பைப் பார்க்க...
இரண்டு மைல் நடந்து பள்ளிக்கு போவேன் .

பிஞ்சிலே பழுத்ததே.. எல்லாம் தலையெழுத்தென்று எட்டி மிதிப்பான் அப்பன்...
பத்து வயதில் திருட்டு...பனிரெண்டில் பீடி... பதிமூன்றில் சாராயம்... பதினாலில் பலான படம்...
பதினைந்தில் ஒண்டி வீட்டுக்காரி... பதினெட்டில் அடிதடி... இருபதுக்குள் எத்தனையோ...

பெண்களிடம் விளையாட்டு...இரண்டு ,மூன்று முறை கருக்கலைப்பு... எட்டாவது பெயிலுக்கு...
ஹெட்மாஸ்டர் வேலையா கிடைக்கும் ?

மண்லாரி ஓட்டினால் லோடுக்கு...நூறு தருவார்கள . வாங்கும் பணத்துக்கு... குடியும் கூத்தியாரும் என... எவன் சொல்லியும் திருந்தாமல்... எச்சிப் பிழைப்பு பிழைக்க ...
கை மீறிப் போனதென்று... கால்கட்டுக்கு ஏற்பாடு செய்தனர் .

வேசிக்கு காசு வேணும் ... வருபவள் ஓசிதானே... மூக்குமுட்டத் தின்னவும்... முந்தானை விரிக்கவும்... மூன்று பவுனுடன் ... விவரம் தெரியாத ஒருத்தி... விளக்கேற்ற வீடு வந்தாள் .
வயிற்றில் பசித்தாலும்... வயிற்றுக்குக் கீழ் பசித்தாலும்... வக்கணையாய் பறிமாறினாள்...

தின்னு கொழுத்தேனே தவிர... மருந்துக்கும் திருந்தவில்லை...

மூன்று பவுன் போட முட்டாப் பயலா நான்... இன்னும் ஐந்து வேண்டுமென்று , இடுப்பில் மிதித்து அனுப்பி வைக்க ...

கறவை மாட்டை சந்தைக்கு அனுப்பி , நான் கட்டினவளை வீட்டுக்கு அனுப்பினான் , சொந்தம் விட்டுப்போகாமல் இருக்க... மாமனாரான மாமன்...!

பார்த்து வாரமானதால்... பசிக்கிறதென்று கைப்பிடிக்க.., தள்ளிப் போனதென்று தள்ளி விட்டாள்...
சிறுக்கிமவ .

இருக்கும் சனி... போதாதென்று இன்னொரு சனியா..?
மசக்கை என்று சொல்லி... மணிக்கொரு முறை வாந்தி.., வயிற்றைக் காரணம் காட்டி...
வாய்க்கு ருசியாய் சமைப்பதில்லை..,

சாராயத்தின் வீரியத்தால்... சண்டையிட்டு வெளியே அனுப்ப.., தெருவில் பார்த்தவரெல்லாம் சாபம் விட்டுப் போவார்கள் .

கடைசி மூன்று மாதம்... அப்பன் வீட்டுக்கு அவள் போக.., கறிவேப்பிலைக்காரி ஒருத்தி...
வாசனையாய் வந்து போனாள்..,
தர்ம ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளதாக... தகவல் சொல்லியனுப்ப..,
ரெண்டு நாள் கழித்து... கடமைக்கு எட்டிப் பார்த்தேன்...
கருகருவென என் நிறத்தில்... பொட்டபுள்ள..!

எவன் கேட்டான் இந்த மூதேவியை... ?
'கள்ளிப் பால் கொடுப்பாயோ ... கழுத்தை திருப்புவாயோ...
ஒத்தையாக வருவதானால் ... ஒரு வாரத்தில் வந்து விடு '
என்று சொல்லி திரும்பினேன் .

ஆறு மாதமாகியும் அவள் வரவில்லை...

அரசாங்க மானியம் ஐயாயிரம்... கிடைக்குமென்று கையெழுத்துக்காகப் பார்க்கப் போனேன் ,

கூலி வேலைக்குப் போனவளைக் கூட்டி வரவேண்டி....
பக்கத்து வீட்டு பாப்பா ஓடிச் செல்ல... ஆடி நின்ற ஊஞ்சலில்... அழுகுரல் கேட்டது..,
சகிக்க முடியாமல் எழுந்து ... தூக்கினேன் ... அதே அந்த பெண் குழந்தை..!
அடையாளம் தெரியவில்லை ...

ஆனால் அதே கருப்பு... கள்ளிப் பாலில் தப்பித்து வந்த அது , என் கைகளில் சிக்கிக் கொண்டது..,
வந்த கோபத்திற்கு... வீசியெறியவே தோன்றியது... தூக்கிய நொடிமுதல்...
சிரித்துக் கொண்டே இருந்தது,
என்னைப் போலவே... கண்களில் மச்சம், என்னைப் போலவே சப்பை மூக்கு,
என்னைப் போலவே ஆணாகப்.., பிறந்திருந்தால் இந்நேரம் இங்கிருக்க வேண்டியதில்லை...,

பல்லில்லா வாயில்...பெருவிரலைத் தின்கிறது, கண்களை மட்டும்.., ஏனோ சிமிட்டாமல் பார்க்கிறது, ஒரு கணம் விரல் எடுத்தால்... உதைத்துக் கொண்டு அழுகிறது,
எட்டி... விரல் பிடித்துத்.. தொண்டை வரை வைக்கிறது,

தூரத்தில் அவள் வருவது கண்டு... தூரமாய் வைத்து விட்டேன்...
கையெழுத்து வாங்கிக்கொண்டு... கடைசி பஸ்ஸுக்கு திரும்பி வருகிறேன்,

முன் சீட்டில் இருந்த குழந்தை... மூக்கை எட்டிப் பிடிக்க
நெருங்கியும்... விலகியும் நெடுநேரம்... விளையாடிக் கொண்டு இருந்தேன்!

ஏனோ அன்றிரவு ... தூக்கம் நெருங்கவில்லை, கனவுகூட கருப்பாய் இருந்தது,
வெளிச்சம் வரும்வரை காத்திருந்தேன்...

போட்ட கையெழுத்துப் பொருந்தவில்லை... என்ற பொய்த்தனத்தோடு ,
இன்னொரு கையெழுத்துக்கு... மீண்டும் சென்றேன்,

அதே கருப்பு, அதே சிரிப்பு, கண்ணில் மச்சம், சப்பை மூக்கு... பல்லில்லா வாயில்
பெருவிரல் தீனி... ஒன்று மட்டும் புதிதாய் ... எனக்கும் கூட சிரிக்க வருகிறது ...

கடைசி பஸ், ஆனால் பேருந்தில்... எந்த குழந்தையும் இல்லை .
வீடு நோக்கி நடந்தேன்,

பாதி வழியில் கறிவேப்பிலைகாரி... கைப் பிடித்தாள் உதறிவிட்டு நடந்தேன்...

தூக்கம் இல்லை நெடுநேரம்...
பெருவிரல் ஈரம் பட்டதால் ...
மென்மையாக இருந்தது ...
முகர்ந்து பார்த்தேன் ....

விடிந்தும் விடியாததுமாய்... காய்ச்சல் என்று சொல்லி... ஊருக்கு வரச் சொன்னேன்,
பல்கூட விளக்காமல் ... பஸ் ஸ்டேண்டுக்கு சென்று விட்டேன்,
பஸ் வந்ததும் லக்கேஜை காரணம் காட்டி... குழந்தையைக் கொடு என்றேன் !

பல்லில்லா வாயில் பெருவிரல் !
இந்த முறை பெருவிரலைத் தாண்டி... ஈரம் எங்கோ சென்று கொண்டு இருந்தது...

தினமும் என் மீது படுத்துக்கொண்டு... பொக்கை வாயில் கடிப்பாள்,

அழுக்கிலிருந்து அவளைக் காப்பாற்ற... நாளுக்கு நாலைந்து முறை குளிப்பேன்,
பான்பராக் வாசனைக்கு... மூக்கைச் சொரிவாள் ,விட்டு விட்டேன் ...
சிகரெட் ஒரு முறை.., சுட்டு விட்டது விட்டு விட்டேன்...
சாராய வாசனைக்கு... வாந்தியெடுத்தாள் ...விட்டு விட்டேன்,

ஒரு வயதானது ...
உறவுகளெல்லாம்... கூடி நின்று , 'அத்தை சொல்லு ' 'மாமா சொல்லு ' 'பாட்டி சொல்லு '
'அம்மா சொல்லு 'என்று...

சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள்...

எனக்கும் ஆசையாக இருந்தது, 'அப்பா 'சொல்லு என்று சொல்ல, முடியவில்லை ......
ஏதோ என்னைத் தடுத்தது, ஆனால் அவளை எதுவும் தடுக்கவில்லை...

அவள் சொன்ன முதல் வார்த்தையே... 'அப்பா'தான்!

அவளுக்காக எல்லாவற்றையும்...விட்ட எனக்கு ,
அப்பா என்ற அந்த வார்த்தைக்காக...
உயிரைக்கூட விடலாம் என்று தோன்றியது,

அவள் வாயில் இருந்து வந்த.., அந்த வார்த்தைக்காக மீண்டும் பிறந்தேன்,
இந்த சாக்கடையை... அன்பாலேயே கழுவினாள்...

அம்மா சொல்லித் திருந்தவில்லை, அப்பா சொல்லித் திருந்தவில்லை ,
ஆசான் சொல்லித் திருந்தவில்லை , நண்பர்கள் சொல்லித் திருந்தவில்லை ,
நாடு சொல்லியும் திருந்தவில்லை,
முழுசாய் மூன்று வார்த்தை பேச வராத ... இந்த முகத்தை பார்த்து திருந்தி விட்டேன்..

வளர்ந்தாள்.., நானும் மனிதனாக வளர்ந்தேன்...
படித்தாள், என்னையும் படிப்பித்தாள்...
திருமணம் செய்து வைத்தேன் ,
இரண்டு குழந்தைகளுக்குத் தாயானாள்,
இரண்டு குழந்தைகளுமே...
பெரியவர்களாய் வளர்ந்து விட்டார்கள்,
நானும்கூட தாத்தாவாகி விட்டேன் ,
என்னை மனிதனாக்க...
எனக்கே மகளாய் பிறந்த...
அந்த தாய்க்காகக் காத்திருக்கிறது ...
**#இந்த_கடைசி_மூச்சு..!**

## Member Article

பாஸ்கர் ராஜ்

# படித்தது பிடித்தது

**குறிப்பு - “கிராமத்து தரவுகள் என்றால், அவைகளில், சில பிற்போக்கான விசயங்களும், அறக்கழிவான சொல்லாடல்களும் இருக்கத்தான் செய்யும். சொலவடைகளும் அதற்கு விலக்கல்ல” - கழனியூரன்**

வட்டார வழக்கில் உள்ள பழமொழிகளை கிராமத்தில் நகைச்சுவையோடு கிண்டலாக சொல்வது தான் சொலவடைகள். தமிழில் மூன்று லட்சத்திற்கும் அதிகமான சொலவடைகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அவற்றில் சிலவற்றை எடுத்து இங்கே சொல்கிறேன். இதில் யாரையும் அல்லது எந்த பலரையும் புண்படுத்தும் நோக்கத்தோடு இதில் எதையும் தேர்ந்தெடுக்கவில்லை.



அக்கபோரு புடிச்ச நாயி வைக்கபோர்லு உக்காந்துகிட்டு தானும் திங்காதாம் திங்கற மாட்டையும் திங்க விடாதாம்



சாமியே சைக்கிளில் போகுதாம் பூசாரிக்கு புல்லட் கேட்குதாம்



**ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம் உள்ள இருக்குமாம் ஈறும் பேனாம்**

*(1.* உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவது

*2.*நம்மிடம் அக்கறையோடு பேசுவது போல் பேசுவது ஆனால் உள்ளுக்குள் பொறாமை, வன்மம் போன்ற தீய எண்ணங்கள் இருக்கும்

*3.* வெளியில பாக்கறதுக்கு பகட்டா இருக்கிறது ஆனால் உண்மையில் நிலைமை வேறு*)*

**அடியேன்னு கூப்பிட பொண்டாட்டி இல்லயாம் இதுல புள்ளய எப்படி பெத்துக்க**

*(*மாசக்கடைசில டூ வீலருக்கே பெட்ரோல் போட காசு இல்லாம இருக்கும்போது புதுசா கார் வாங்கனவன் நீ எப்ப கார் வாங்கப்போறன்னு கேட்டா எப்படி இருக்கும்*)*

**நாட்டாமை செய்யுதாம் ஆட்டு புளுக்கை கணக்கு பாக்குதாம் கட்ட வெளக்கமாறு**

*(*கஷ்டப்பட்டு தேடறவனுக்கு ஒரு பொருளோ பதவியோ கெடக்காம கஷ்டப்படாம ஒருத்தன் ஈஸியா காசு குடுத்தோ சிபாரிசாளோ வாங்கிகிட்டு போயிடுவான்*)*

**பக்கத்து வீட்டுகாரி ஆம்பல புள்ள பெத்தானு அடுத்த வீட்டுகாரி இடிச்சிகிட்டு செத்தாளாம்**



**சொருகி கிடந்த அகப்பை சோறு அள்ள பொறப்புட்டுருச்சாம் .**

(எப்ப பாத்தாலும் கதை பேசிகிட்டு, வெட்டியா சுத்திகிட்டு இருக்கிறவன் திடீர்னு வேலைக்கு போனா சொல்றது)

**நாயக் கேப்பாரும் இல்ல, நடு வீட்ல வைப்பாரும் இல்ல...! ஏன்னு கேப்பாரும் இல்ல, எடுத்துப் பிடிப்பாரும் இல்ல..!**

**போன மாட்ட தேடுவாரும் இல்ல வந்த மாட்ட கட்டுவாரும் இல்ல**
( நம்மள யாரும் கண்டுக்காம தனிமையில இருக்கும்போது சொல்றது)

**ஆறு காதம்கிற போதே கோவணத்தை அவுத்து குடிமியில கட்டுனானாம்**
(10 -மைல் =1 -ஆதம், இன்னும் பத்து மயில்ல ஆறு வருதுன்னு சொன்ன உடனே கோவணம் நனஞ்சிர கூடாதுன்னு தலையில எடுத்து கட்டுவனாம். இது ஒரு விஷயத்தை மிகை படுத்தி, அதீத ஜாக்கிரதையா இருக்கிறவங்கள சொல்றது)

**விலை மோர்ல வெண்ணை எடுத்து தலைமகனுக்கு கல்யாணம் பண்ணுவா**

**எள்ளப் பிச்சு எழுபது பேருக்கு பங்கு வச்சாளாம்**

**கடிச்ச பாக்குல காப்பாக்கு கொடுக்காத பெரியாத்தா காரியாபட்டி வரைக்கும் நான் பெத்த மகளே நான் பெத்த மகளேன்னு வழியனுப்ப வருவாளாம்**

(ஒரு கருமிய குறிப்பிட்டு சொல்றது)

**வாயக் கொண்டு போனவ வீட்டுக்குள்ள போனாளாம், வாழைப்பழம் கொண்டு போனவ வாசல்ல நின்னலாம்**

(இங்கு வாழைப்பழம் என்று சொல்வது சீதனம், இரண்டு மருமகள்கள் ஒரு வீட்டிற்கு வரும்போது ஒருவர் சீதனத்தோடும் ஒருவர் வாய் பேசுபவராகவும் இருந்தால் வாயாடியாக இருப்பவரே பிழைக்க முடியும் என்பது இது)

**வாய் இல்லன்னா உன்ன நாய் தூக்கீட்டு போயிடும்**

**-இடி இடின்னு இடியாப்பம் பிழிஞ்சு காப்பித் தண்ணியக் கொடுத்து கப்பலேத்தி விட்டுருவா**

**(** வீட்டு வேலைக்கு வந்தவரிகளிடம் அளவுக்கு அதிகமாக வேலை வாங்குபவர்)

**-எள்ளுக்கு சேலை இருபத்து இரண்டு முழமாம் சுத்து எட்டலையின்னு சுண்டுறா கண்ணீரை**
(எனக்கு அது இல்ல எது இல்லன்னு எப்ப பாத்தாலும் குறை சொல்லிக்கொண்டே இருப்பவர்)

**வெளியில சொன்னாளாம் விரதமுன்னு கையில நாறுச்சாம் கருவாடு**

**ஆத்துல போற தண்ணிய அய்யா குடி ஆத்தா குடிங்கிறான்**

**-அகழியிலே விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்**

(அகழி: கோட்டையைச் சுற்றியுள்ள நீர்நிலை -முதலைக்கு ஏற்ற இடம். ஒருவருக்குத் தகுதியான அல்லது வசதியான இடம் கிடைத்துவிட்டால், அதுவே அவர்களுக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியாகவும், வசதியாகவும் அமையும் )

**அக்காள் பண்டம் அரிசி, தங்கச்சி பண்டம் தவிடா?**

**அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச் சொன்னால் வெங்காயம்... ம்... கரிவேப்பிலை..என்பாள்**

**அங்கும் இருப்பான், இங்கும் இருப்பான், ஆக்கிய சோத்துக்குப் பங்கும் இருப்பான்- வெங்கப்பெயல்**

(உழைக்காத இடத்திலும், தந்திரமாக உணவு அல்லது பலனைப் பங்கிட்டுக்கொள்ள வரும் நபர்.)

**அச்சாணி இல்லாத தேர்; முச்சாணும் ஓடாது**

**அசைந்து தின்கும் யானை; அசையாமல் தின்கும் வீடு**

(வீடுகட்ட ஆகும் செலவு)

அஞ்சுகிறவனைக் (அச்சம் உடையவனை) கோழிக்குஞ்சும் விரட்டும்

அஞ்சு காசுக்குக் குதிரையும் வேண்டும்; அது காற்றாய்ப் பறக்கவும் வேண்டும் என்றால் எப்படி?

அடிச்சட்டி ஓட்டையாய் இருந்தாலும் கொழுக்கட்டை வெந்தால் சரிதான்

அடிநாக்கிலே நஞ்சு, நுனி நாக்கிலே அமுதம்.

அண்டை வீட்டுக் கடனும், பிட்டத்துச் சிரங்கும் ஆகவே ஆகாது!

அண்ணன் எப்ப சாவான்? திண்ணை எப்ப கிடைக்கும்?

அந்தியில் ஈசல் வெடித்தால், அடை மழை நிச்சயம் உண்டு

அந்தி மழை அழுதாலும் விடாது

அப்பன் அருமையும், உப்பின் அருமையும் இல்லாத போது தெரியும்.

அப்பன் சோத்துக்கு அலைகிறான் இங்கே, பிள்ளை அன்னதானம் செய்கிறான் அங்கே!

அமாவாசை இருட்டிலே பெருச்சாளிக்கு(பெரிய எலி) போன இடம் எல்லாம் வழிதான்.

அம்மியும் குழவியும் ஆடிமாதக் காற்றில் ஆகாயத்தில் பறக்கும் போது, எச்சிலை எம்மாத்திரம்?

அரசனுக்கு என்ன ஒரு வார்த்தையில் சொல்லிவிடுவார், அடிமைக்கல்லவோ தலைச்சுமை

(தண்டனை)

அரண்டவன் கண்ணுக்கு, இருண்டதெல்லாம் பேய்.

**அவரை விதைத்ததில் துவரை முளைக்குமா..?**

**கூரை ஏறி கோழி பிடிக்க தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம்**

**பனை மரத்தின் கீழே நின்று பால் குடித்தால், அது கள் என்று தான் நினைப்பார்கள்**

**அரைப்பணமும் இல்லை, அருவாள் மனையும் இல்லை**

**சும்மா இருந்த சங்கை ஊதி கெடுத்தானாம் ஆண்டி**

**கோழி மிதித்து குஞ்சு முடமாகுமா?**

**அன்ன நடை (அலங்கார நடை) நடக்கப் பழகப் போய் காக்காய் தன்நடையும் மறந்த கதையாய் இருக்கிறதே!**

**அன்றைக்கு (நாளைக்கு) கிடைக்க இருக்கிற ஆயிரம் பொற்காசை விட, இன்றைக்குக் கிடைக்கிற அரைக்காசு பெரியது.**

**அற்பன் கையில் ஆயிரம் பொன் கிடைத்தால் வைக்கிட இடம் அறியான்.**

**அற்பனுக்கு பவுசு (வாழவு) வந்தால், அர்த்த ராத்திரியிலும் குடை பிடிப்பான்**

**அன்றில்லை, இன்றில்லை அழுகல் பலாக்காய், கல்யாண வாசலிலே கலிந்துண்ண வந்தாயோ...?**

(திடீர் நட்பைக் கேலி செய்யும் அங்கதச்சுவையுடைய பழமொழி).

**அறுப்புக் காலத்திலே** (அறுவடைநாளிலே) **எலிக்கும் அஞ்சாறு வப்பாட்டிகளாம்**

**அறுபத்தினாலடி கம்பத்தில் ஏறி வித்தை காட்டினாலும் அடியில் இறங்கித்தான்** (தரையில் இறங்கித்தான்) **'காசு' வாங்க வேண்டும்.**

**அவரை விதைத்ததில் துவரை முளைக்குமா..?**

**கூரை ஏறி கோழி பிடிக்க தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம்**

**பனை மரத்தின் கீழே நின்று பால் குடித்தால், அது கள் என்று தான் நினைப்பார்கள்**

**அரைப்பணமும் இல்லை, அருவாள் மனையும் இல்லை**

**சும்மா இருந்த சங்கை ஊதி கெடுத்தானாம் ஆண்டி**

**கோழி மிதித்து குஞ்சு முடமாகுமா?**

**அன்ன நடை (அலங்கார நடை) நடக்கப் பழகப் போய் காக்காய் தன்நடையும் மறந்த கதையாய் இருக்கிறதே!**

**அன்றைக்கு (நாளைக்கு) கிடைக்க இருக்கிற ஆயிரம் பொற்காசை விட, இன்றைக்குக் கிடைக்கிற அரைக்காசு பெரியது.**

**அற்பன் கையில் ஆயிரம் பொன் கிடைத்தால் வைக்கிட இடம் அறியான்.**

**அற்பனுக்கு பவுசு (வாழவு) வந்தால், அர்த்த ராத்திரியிலும் குடை பிடிப்பான்**

**அன்றில்லை, இன்றில்லை அழுகல் பலாக்காய், கல்யாண வாசலிலே கலிந்துண்ண வந்தாயோ...?**

(திடீர் நட்பைக் கேலி செய்யும் அங்கதச்சுவையுடைய பழமொழி).

**அறுப்புக் காலத்திலே** (அறுவடைநாளிலே) **எலிக்கும் அஞ்சாறு வப்பாட்டிகளாம்**

**அறுபத்தினாலடி கம்பத்தில் ஏறி வித்தை காட்டினாலும் அடியில் இறங்கித்தான்** (தரையில் இறங்கித்தான்) **'காசு' வாங்க வேண்டும்.**

**Member Article** **விகாஷ் அச்சுதராமையா**

## சத்தத்திற்குப் பின்னால

குளிரூட்டப்பட்ட அலுவலகத்தில் மாதவனின் குரல் மட்டும் அனலாய்த் தெறித்தது.

“ஜாக்கிரதை! அவன் வள்ளுன்னு விழுவான்.” என்று யாரோ ஓதினார்கள்.

மெத்தப் படித்த மக்கள் இப்படி குரைப்பார்களா? என்று மனதிற்குள் சிரித்தேன். ஆனால் வாரத்தின் முதல் நாளே அந்த வடு விழுந்தது.

“ஹே மாதவன்! என் கம்ப்யூட்டரில் சிக்கல். உதவ முடியுமா?” என்று கேட்டேன். கீபோர்டில் ஓடும் விரல்கள் தயங்கவில்லை. “மெயில் போடுன்னு நூறு தடவை சொல்லணுமா? கிளம்பு!” என்று வெடுக்கென்றான்.

கண்களைப் பார்க்கவில்லை. சொற்கள் தேனீ போல தைத்தன. சுற்றினர் மௌனம் அடைத்தது. என் முகம் சிவந்தது.

மெதுவா திரும்பினேன். “அவன் ஸ்டைல்,” என்று பக்கத்தினர் சிரித்தார். “சத்தத்திற்குப் பழகிக்கொள்.”

மாதவன் தனி ரகம். கூர்மையான சொற்கள். தன்னை வேலியில் அடைத்துக்கொள்ளல். ஒவ்வொரு மீட்டிங்கும் போர்க்களம். பொறுமை கரைந்தது.

ஒரு காலை, அவன் முகம் இருண்டிருந்தது. காபி கோப்பை நடுங்கியது. கண்கள் தரையில்.

“சோர்வா தெரியுரே. ஆர் யு ஓகே?” என்று கேட்டேன்.

அவன் நின்றான். அமைதி கனத்தது. ‘வேலி’ சரிந்தது.

“தூக்கமில்லை. அம்மா சீரியஸ். ஆஸ்பத்திரி-வேலை ஓடிட்டேன். சாரி...” என்று கரகரத்தான்.

அந்த ‘சாரி அறையை மாற்றியது. கண்களில் தேக்கம். சத்தமில்லா அழு.

மறுநாள் எங்கள் புன்னகைகள் ஒட்டாமல்தான் இருந்தன. ஆனால், அந்த வேலி திரும்ப உயரவில்லை.

அவனை மனிதனாக அணைத்தேன். “இதை நீ எப்படி செய்வ?” என்று யோசனை கேட்டேன். தொனி மென்மையானது.

சில வாரங்களில், விவாத நடுவே: “நல்ல பாயிண்ட். நீ சொல்வது சரி” என்றான். அந்த நொடி, அவன் உலகம் கொஞ்சம் திறந்தது. என் பார்வையும்.

அடுத்த முறை சத்தம் கேட்டால், விலகாதீர்கள். பின்னால் ஒரு கதை ஒளிந்திருக்கலாம்.

மாதவன் இன்றும் கீபோர்ட் தட்டுகிறான். ஆனால் சில நாட்கள், அவன் கண்கள் தரையை விட்டு நம்மைத் தேடுகின்றன.



# Artistic Corner

## Art By Kuppal Annamalai












## Art By Amruthavarshini



# Artistic Corner

## Artistic Journey and Creative Practice – Lavanya Kumaran

**About the Artist**

I am Lavanya, an artist and educator, and I am pleased to share a brief overview of my creative journey. It has been nearly two years since my relocation to Alabama, and this period has been both enriching and inspiring, offering continuous opportunities for artistic and professional growth.



**Art Practice and Development**

My artistic practice has continued to evolve through consistent engagement in workshops, creative projects, and teaching experiences. Art remains a central part of my professional and personal life, and I am grateful for the encouragement and support that has enabled me to further develop my skills and explore new dimensions of creativity.



# Artistic Corner



**Teaching and Creative Engagement**

I am actively involved in teaching art to students through both online and in-person platforms. In addition, I conduct workshops that encourage creative expression and skill development among learners.

It is a privilege to guide students in discovering their artistic abilities, and I take great pride in sharing selected works created by my students, which reflect their imagination, effort, and artistic growth.

**Exploration of Traditional Art Forms**

Alongside teaching, I have been deeply engaged in the study and practice of traditional Indian art forms. In particular, my ongoing exploration of Kerala mural art over the past year has been a significant and fulfilling part of my artistic journey.

This pursuit has long been a personal aspiration, and I am grateful for the opportunity to continue learning and contributing to this rich artistic heritage.



## Artistic Corner










## Artistic Corner









## Artistic Corner





**Conclusion**

For me, art represents a continuous process of learning, reflection, and expression. I remain committed to both teaching and practice, and I look forward to further contributing to the artistic community through meaningful creative engagement.

# Youth Achievement

We are delighted to share some wonderful news with our community!



Abarnika Balamurugan has secured **3rd Place** in the FETNA KuralTheni Competition (Arumbugal Pirivu). After successfully clearing multiple online rounds, she represented Alabama at the in-person finals held during the annual FETNA convention in New Jersey, where she achieved this remarkable milestone.

We are incredibly proud that Abarnika is a student of the Alabama Tamil Academy and has brought this honor to our community. This is a historic achievement for the Alabama Tamil community, and both the **Alabama Tamil Sangam** and **Alabama Tamil Academy** are thrilled to celebrate this proud moment.

We extend our heartfelt congratulations to Abarnika and our sincere appreciation to her proud parents, Bala Murugan and Geetha, whose unwavering support, encouragement, and dedication have played a vital role in her success.

To recognize this outstanding accomplishment, the **Alabama Tamil Academy** and Alabama Tamil Sangam are pleased to announce that we will be covering Abarnika's travel expenses and **FETNA** convention entry ticket.

We are also happy to share that this will become a continuing tradition. Going forward, the Alabama Tamil Academy will support all its students who qualify for the FETNA final competitions by sponsoring their travel expenses and FETNA entry ticket, encouraging more children to represent Alabama on this prestigious stage.

Congratulations once again, Abarnika! We wish you many more achievements in the years ahead.

# ATS & ATA Cash Flow (Q1 2026)

| Alabama Tamil Sangam Balance Sheet Q1 2026 | | | | | |
|---|---|---|---|---|---|
| Alabama Tamil Sangam Balance Sheet As Of Mar/31/2026 | | | | | |
| | Balance Brought Forward From Q4 2025 | | | | $18,548.88 |
| **No** | **Date** | **Description** | **Income** | **Expenses** | |
| 1 | Jan-8-2026 | Miscellaneous | | 134.99 | |
| 2 | Jan-18-2026 | Pongal Celebration 2026 | $2,224.00 | $8,942.54 | |
| 3 | Feb-11-2026 | Contribution to Holi fundraiser for charity (To Aastha) | | $150.00 | |
| 4 | Mar-8-2026 | Women's day celebrations - Personal Finance Topic | $158.94 | $619.61 | |
| 5 | Mar-14-2026 | Family walk | | $9.60 | |
| 6 | Mar-31-2026 | IT expenses (google drive storage - annual) | | $19.99 | |
| 7 | Mar-31-2026 | General Expenses (storage facility) | | $294.00 | |
| 8 | Mar-31-2026 | 2026 membership | $3,799.18 | | |
| 9 | Mar-31-2026 | 2026 sponsorship | $152.00 | | |
| | | **Total income** | **$6,334.12** | | |
| | | **Total expenses** | | **$10,170.73** | |
| | | **Change in Net Assets** | | | **-$3,836.61** |
| | | **Ending Balance As of Mar/31/2026** | | | **$14,712.27** |

| Alabama Tamil Academy Balance Sheet As Of Mar/31/2026 | | | | | |
|---|---|---|---|---|---|
| | Balance Brought Forward From Q4 2025 | | | | $4,470.47 |
| **No** | **Date** | **Description** | **Income** | **Expenses** | |
| 1 | Feb-28-2026 | Second Semester Fee | $2,100.00 | | |
| | | **Tamil School Income** | **$2,100.00** | | |
| | | **Tamil School expenses** | | **$0.00** | |
| | | **Change in Net Assets** | | | **$2,100.00** |
| | | **Ending Balance As of Mar/31/2026** | | | **$6,570.47** |

# ATS & ATA Cash Flow (Q2 2026)

| Alabama Tamil Sangam Balance Sheet Q2 2026 | | | | | |
|---|---|---|---|---|---|
| Alabama Tamil Sangam Balance Sheet As Of Jun/30/2026 | | | | | |
| | | Balance Brought Forward From Q1 2026 | | | $14,712.27 |
| No | Date | Description | Income | Expenses | |
| 1 | Apr-13-2026 | 2026 sponsorship | $500.00 | | |
| 2 | May-14-2026 | 2025 cultural event: additional invoice from Samford University | | $2,274.80 | |
| 3 | May-15-2026 | 2026 membership | $112.73 | | |
| 4 | Jun-3-2026 | General Expenses (storage facility) | | $313.00 | |
| 5 | Jun-26-2026 | Pongal celebration (Jan-2026) | | $75.00 | |
| 6 | Jun-26-2026 | ATS Cricfest 2026 | | $216.30 | |
| 7 | June-29-2026 | IT expense (GoDaddy renewal) | | $653.13 | |
| 8 | Jun-29-2026 | Miscellaneous | | $56.81 | |
| | | **Total income** | **$612.73** | | |
| | | **Total expenses** | | **$3,589.04** | |
| | | **Change in Net Assets** | | | **-$2,976.31** |
| | | **Ending Balance As of Jun/30/2026** | | | **$11,735.96** |

| Alabama Tamil Academy Balance Sheet As Of Jun/30/2026 | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Balance Brought Forward From Q1 2026 | | | $6,570.47 |
| No | Date | Description | Income | Expenses | |
| 1 | Apr-26-2026 | Second Semester Fee | $100.00 | | |
| 2 | May-3-2026 | Last day of school - Gifts for teachers & Prizes for "Word battle" contest | | $430.00 | |
| 3 | May-3-2026 | Donations | $1,022.00 | | |
| | | **Tamil School Income** | **$1,122.00** | | |
| | | **Tamil School expenses** | | **$430.00** | |
| | | **Change in Net Assets** | | | **$692.00** |
| | | **Ending Balance As of Jun/30/2026** | | | **$7,262.47** |

# Thank You to Our Sponsors

## ★ Gold Sponsor ★




Your generous support powers our community events!

# ★ Silver Sponsors ★










Thank you for supporting our community!

# நன்றி

Thank you for reading our newsletter! We hope you enjoyed this edition of Birmingham Pakkangal. Your continued support and engagement make our community stronger.

## We Want Your Contributions!

We invite you to submit articles, poems, artwork, recipes, travel stories, and creative writing for our next newsletter issue. Let your voice be heard!
atscommunication@alabamatamilsangam.org

**YOUR FEEDBACK IS VALUABLE TO US!**

## CONTACT US

https://alabamatamilsangam.org/

atsexecutive@alabamatamilsangam.org

## FOLLOW US

f YT in

**Newsletter Publishers & Editors**

HariPrasath
Yesh Logabiraman
Roy Pravien

Alabama Tamil Sangam is a Non-Profit, Non-Political, Non-Religious Organization promoting Tamil language, culture, art, and music, and fostering community relationships.